15th November 1957]

Life Prisoners

* 177 *Q.*—SRI K. R. NALLASIVAM : Will the Hon. the Minister for Home be pleased to state the number of prisoners undergoing life sentence in the Central Jails in the State at present?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : At present 1,418 prisoners are undergoing life sentence in the Central Jails in the State.

SRI K. R. NALLASIVAM : ஜன்ம தண்டனைக் கைதிகள் ஐந்து ஆண்டுகளில் உள்ளபூர்வமாக மாறிவிடுகிறார்கள். ஆகவே, 5 ஆண்டுகளுக்குப் பின் ஒரு போர்டு வைத்து இவர்களை விடுதலை செய்ய அரசாங்கம் முற்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த யோசனையை அரசாங்கம் எற்றுக்கொள்ளவில்லை. ஆயுள் தண்டனையென்றால், 20 ஆண்டுகள் கழிய வேண்டும். ஆனால், இந்த 20 ஆண்டுகளில் மூன்றில் இரண்டு பங்கு ஆகி விட்டால் இவர்களை போர்டில் பரிசீலனை செய்து விடுதலை செய்துவரப்படுகிறது.

SRI A. A. RASHEED : Sir, may I know the number of women prisoners undergoing life sentence?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I think it is fifty.

SRI M. JAGANNATHAN : ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளை பரோலில் வீடுகளுக்குப் போய்த் திரும்பிவர எதாவது சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவசியம் என்று கருதப் பட்டால் அது செய்யப்பட்டு வருகிறது.

SRI V. K. KOTHANDARAMAN : ஆயுள் தண்டனைக் கைதிகள் பரோலில் அவர்களுடைய வீடுகளுக்குப் போவதற்கு அனுமதிக்கப்படுகிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பு கேள்வி கேட்டதும் பதில் சொன்னதும் எல்லாம் தமிழிலேதான்.

SRI A. V. P. ASAITHAMBI : கொலை, கொள்ளைக் குற்றம் சாட்டப் பட்ட கம்யூனிஸ்ட் கைதிகள் யாரேனும் உண்டா ? எத்தனை பேர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : என்ன குற்றம் என்று இப்போது சொல்வதற்கில்லை. கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்போது 12 பேர்கள் இருக்கிறார்கள்.

SRI A. VEDARATNAM PILLAI : இந்த ராஜ்யத்தைச் சேர்ந்த ஆயுள் தண்டனை அடைந்த கைதிகள் அந்தமானில் யாராவது இருக்கிறார்களா? இந்த ஆயுள் தண்டனைக் கைதிகளை அந்தமானுக்கு அனுப்பும் வழக்கம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்த முறை முன்னமேயே கைவிடப்பட்டுவிட்டது. இந்த ராஜ்யத்தைச் சேர்ந்த ஆயுள் கைதிகள் அந்தமானில் யாரும் இல்லை.

Nursing Orderlies

* 178 *Q.*—SRI S. B. ADITYAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the male nursing orderlies

and female nursing orderlies employed in the following hospitals were granted their annual increments during the last three years :—

(1) Rajah Sir Ramaswamy Mudaliar's Lying-in hospital, Madras ;

(2) Stanley Hospital, Madras ;

(3) General Hospital, Madras; and

(4) Ophthalmic Hospital, Egmore?

THE HON. SRI M. A. MANICKAVELU : A statement [a] showing the position regarding the grant of increments to the Nursing Orderlies in the respective hospitals is placed on the Table of the House.

SRI S. B. ADITYAN : ஸர், இந்த ஆர்.எஸ்.ஆர்.எம். ஆஸ்பத்திரியில் உள்ள கடைநிலை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு 3, 4, 5, 6, 7 ஆண்டுகளாகக் கொடுக்கப்படாமல் இருப்பதாக அச்சிடப்பட்ட பதிலில் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்த கடை நிலை ஊழியர்களுக்கு இவைகளை எல்லாம் சேர்த்து நஷ்டம் இல்லாத முறையில் இந்த சம்பள உயர்வு கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : I am sorry that there had been such a long delay. I shall take early steps to see that this is rectified.

Medical Subordinates in City hospitals

* 179 Q.—SRI S. B. ADITYAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Medical Subordinate Service and the Last Grade Service staffs employed in the Madras City hospitals are granted any weekly off-duty day ;

(*b*) whether the working hours are limited to eight hours a day ; and

(*c*) whether they are given any extra pay if they are required to work more than eight hours a day or on their off-duty days?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The Medical Subordinates employed in all the City Medical Institutions except those employed in the Government Ophthalmic Hospital, Madras, the Government Hospital for Women and Children, Madras, and the Government Mental Hospital, Madras, are granted weekly off-duty day. The last grade servants employed in the Government General Hospital, Madras and Kasturba Gandhi Hospital for Women and Children, Madras, only are granted weekly off-duty day. The other hospital workers are put on shift system and they are provided with off-duty by rotation.

(*b*) No, Sir.

(*c*) No.

SRI S. B. ADITYAN : இந்த ஆஸ்பத்திரிகளில் வேலைசெய்கின்ற தொழிலாளர்களுக்கு 8 மணி நேரம் வேலை என்ற கட்டுப்பாடு இல்லை என்பதாக மந்திரி அவர்கள் தெரிவித்தார்கள். தனிப்பட்ட முதலாளிகள் நடத்துகிற தொழில்களில் கூட 8 மணி நேரம் வேலை என்று தீர்மானிக்கப்பட்டு வருகிறது. இவ்விதம் 8 மணி நேரம் வேலை இருக்க வேண்டும் என்று சர்க்கார் தனிப்பட்ட முதலாளிகளுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டாமா ?

[a] Printed as Appendix II on pages 396–397 infra.